முருகப்பெருமான் துணை

**மகான் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.07.2022**, செவ்வாய்கிழமை

1. ஞானயுகம் படைப்பேன் என
ஞானபண்டிதன் அவதாரமாக
தானதரும வழிகள் காட்டி
தவசியாக வந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது நள்ளி திங்கள்
வரங்களென தசதிகதி குசன்வாரம்
வழங்குவேன் அருளாசி தன்னை
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 10 நாள், 26.07.2022 செவ்வாய்கிழமை)
3. தன்னையே சுந்தரமூர்த்தி நாயனாரும்
தரணியோர் ஞான வழிவர உரைப்பேன்
அன்னை தந்தை குரு கடவுளெனும்
ஆற்றல் மிக்க சக்திகளை வணங்கி
4. வணங்கிச் சான்றோர்களாக
வருமுலகில் மக்கள் தேறிட
வணங்கி வர வேண்டும் அரங்கன்
வழிகாட்டும் ஞான நெறிவழி
5. வழிதனை கடைபிடித்து வர
வரங்கள் பல கிட்டி இனிதே
பழிபாவச்செயல்கள் நெருங்கா
பாதுகாப்பான மக்களின் வாழ்வாக
6. ஆகவே நிலைகள் பெருகி
ஆன்மீக ஞான பலம் தானும்
மிகையாகி உலகம் எங்கிலும்
மக்களிடை சகமனிதர்களை போற்றும்
7. போற்றும் பக்குவம் மனபலம்
புண்ணியம் தேடும் குணமும்
ஆற்றலாக தொண்டாற்றும்
அனைத்து உயர்குணங்களும் வந்தடையும்
8. அடையவே சேவை செய்துகொண்டே
அதன்வழியே கடைத்தேற
தடையிலா அருளும் தயவும்
தவராஜன் மூலம் வந்து சேரும்
9. சேரவே கலியுகம் தன்னில்
சுயநலமான செயல்பாடு
கூறவே முழுமைபட விலகி
குறையிலா தரும ஞானம் கூடிய

10. கூடிய தயவான சேவையும்
குறைவிலா பொது நலமாக
கூடிய வண்ணம் செயல்கள்
குவலயம் கண்டு மாறும்

11. மாறும் ஞான ஆட்சி காலமாக
மாறும் ஆறுமுகனார் ஆசி
ஆறுதல் பெற்ற ஞானிகள் ஆட்சியாக
அறிவித்த அருளாசி முற்றே

–சுபம்–